[2024 பிப்ரவரி 13

(இ) செல்வி எம். பாத்திமா பீவி, தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு முன்னாள் ஆளுநரும், உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதியுமான செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் 23–11–2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

1997–2001 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு ஆளுநராகப் பணியாற்றிய செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் உச்ச நீதிமன்ற முதல் பெண் நீதிபதி என்ற பெருமைக்குரியவர். தேசிய மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர், கேரள பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவர் உள்ளிட்ட உயர் பொறுப்புகள் வகித்த செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் இந்த ஆண்டிற்கான பத்ம பூஷண் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஈ) திரு. எம்.எம். இராஜேந்திரன், தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் மற்றும் ஒடிசா மாநில முன்னாள் ஆளுநர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும், ஒடிசா மாநில முன்னாள் ஆளுநருமான திரு. எம்.எம். இராஜேந்திரன் அவர்கள் 23–12–2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணியாற்றியபோது 1964 ஆம் ஆண்டு தனுஷ்கோடியில் ஏற்பட்ட இயற்கை சீற்ற மீட்புப் பணிகளைத் திறம்படச் செயல்படுத்தியவர். 1988–1991 ஆம் ஆண்டுகளில் தமிழக அரசின் தலைமைச் செயலாளராகவும், 1999–2004 ஆம் ஆண்டுகளில் ஒடிசா மாநில ஆளுநராகவும் திறம்படப் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும்

இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

(உ) திரு. விஜயகாந்த், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் தலைவர் மற்றும் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் தலைவரும், பிரபல நடிகரும், சட்டமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. விஜயகாந்த் அவர்கள் 28–12–2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து, தென்னிந்திய திரைப்பட நடிகர்கள் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்று, பொது வாழ்விலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு 'கேப்டன்' என அனைவராலும் அன்போடு அழைக்கப்பெற்ற திரு. விஜயகாந்த் அவர்கள் இந்த ஆண்டின் பத்ம பூஷண் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெருமைக்குரியவர்.

2006–2011 ஆம் ஆண்டுகளில் விருத்தாசலம் தொகுதியிலிருந்தும், 2011–2016 ஆம் ஆண்டுகளில் ரிஷிவந்தியம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, 2011–2016 ஆம் ஆண்டுகளில் எதிர்க்கட்சித் தலைவராகவும் திறம்படப் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், திரைத் துறையினருக்கும், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தைச் சார்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)